ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2024/38 - 2017 ජුනි මස 21 වැනි බදාදා - 2017.06.21
*2024/38 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: பல/4/2/1

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

காலி மாவட்டத்தில், பலப்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில், இல. 20 பீ, பிராஹ்மணவத்தை கிராம அலுவலர் பிரிவிலுள்ள, நில அளவை மா அதிபரால் தயாரிக்கப்பட்ட 1975.05.25 ஆந் திகதிய ஆரம்ப வரைபட இல. கா.1097 இல் துண்டு இல. 01 என விபரிக்கப்பட்டுள்ள சுமார் 01 ரூட் 04 பேர்ச்சஸ் விஸ்தீரணமுடைய வலிக்கணவத்தை எனும் காணி பலப்பிட்டிய பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ இல்லம் அமைப்பதற்கு எடுத்துக் கொள்ளல் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு :-

01. **துண்டு இல. 1**
**காணியின் பெயர் : வலிக்கணவத்தை ; விஸ்தீரணம் : 01 றூட் 04 பேர்ச்சஸ்.**
வடக்கு :- வீதி, பி.பி.அ. 1664-01; கிழக்கு:- ஜீ.ஒ.ரீ.த. சில்வா உரிமை கோரும் வலிக்கணவத்தை, வீதி; தெற்கு:- டில்மன் அபேசேகர உரிமை கோரும் போகஹவத்தை, ஜீ.ஒ.ரீ.த சில்வா உரிமை கோரும் வலிக்கணவத்தை; மேற்கு:- எல். எட்லின் மற்றும் கே. எச். பீ. சுகததாஸ உரிமை கோரும் தாச்சி கெதர குருந்துவத்தை.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு பலப்பிட்டிய பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 07 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பீ. பி. எஸ். அனுராதி,
பிரதேச செயலாளர்,
பலப்பிட்டிய.

பிரதேச செயலகம்,
பலப்பிட்டிய.
2017, யூன் 17.

7-134


*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*